## தமிழ்நாடு சட்டப் பேரவை.

### சனிக்கிழமை, 1972 டிசம்பர் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

#### கிராமங்களுக்கு வானொலிப் பெட்டிகள்.

*101—வினா : திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும் வானொலிப் பெட்டி அரசின் சார்பில் வழங்கும் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. பி. எஸ். மணியன் : வானொலிப் பெட்டிகள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன ? ஊராட்சி மன்றங்களின் தலைமையிடத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறதா ? அல்லது சிற்றூர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டில் 1970–71ம் ஆண்டு முடிவில் 13,060 ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் உள்ளன. அவற்றில் 27,857 வானொலிப் பெட்டிகள் இருந்து வருகின்றன. 1971–72 72–ஆம் ஆண்டில் 5,000 வானொலிப் பெட்டிகள் வைக்க அரசினரால் ஐந்து லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. வானொலிப் பெட்டிக்கு அரசாங்கம் ரூ. 100 மானியமாகத் தருகிறது. ஊராட்சி மன்றமும், ஊராசி ஒன்றியமும் சேர்ந்து வானொலிப் பெட்டிகளை வாங்குகிறார்கள் தமிழகத்தைப் பொறுத்த வரையில், 16,940 வருவாய் ஊர்களும் 41,890. சிற்றூர்களும் உள்ளன. எல்லா ஊர்களுக்கும் வானொலிப் பெட்டிகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் ஆண்டொன்றுக்கு 5,000 வானொலிப் பெட்டிகள் வைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1972–73–ஆம் ஆண்டிலும் 5,000 வானொலிப் பெட்டிகள் வழங்க அரசு திட்டம் அமைத்துள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் 42 கிராமங்கள் இருக்கின்றன. நிதி நிலை இருந்தால், எல்லாக் கிராமங்களுக்கும் வானொலிப் பெட்டிகள் அமைத்துக் கொள்ளலாம் என்ற, உத்தரவை பிறப்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வைத்துக்கொள்வதற்கு இப்போதே வாய்ப்பு இருக்கிறது. இப்போதே 13,060 ஊராட்சிகளும் பேரூராட்சிகளும் இருக்கின்றன. அவற்றில் 27,857 வானொலிப் பெட்டிகள் இருக்கின்றன. எல்லா ஊர்களுக்கும் வானொலிப் பெட்டிகள் இருக்க வேண்டும் என்பது குறிக்கோள். அரசைப் பொறுத்த வரையில், ஆண்டொன்றுக்கு 5,000 வானொலிப் பெட்டிகள் வாங்குவதற்கு மட்டும் மானியம் வழங்குகிறார்கள். எந்த ஊராட்சி ஒன்றியத்திலோ, ஊராட்சி மன்றத்திலோ நிதி வசதி இருந்தால் அது வானொலிப் பெட்டி வாங்கிக்கொள்வதில் தடை இல்லை.

திரு. எ. சுவாமிதாஸ்: 1972-73-ஆம் ஆண்டுக்கு கன்யாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் எத்தனை வானொலிப் பெட்டிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திரு, ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, அரசு மானியத்தில் வாங்கப்படுகிற வானொலிப் பெட்டிகளை அந்தந்த கிராமத்தின் ஊராட்சி மன்றத் தலைவர், தம் வீட்டில் வைத்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை அகற்றி, கிராமப் பொது இடங்களில் மக்கள் மத்தியில் வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுமான வரையில் பொது இடங்களில் வைக்க வேண்டுமென்றுதான் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதற்கென்று தனிக் கட்டடம் கட்ட வேண்டும். அதற்கு ரூ. 4,000 முதல் ரூ. 5,000 வரை தொகை இருந்தால்தான் கட்டடம் கட்ட முடியும். அப்படிப்பட்ட வசதி இல்லாத ஊர்களில் சில பேர் தாமாகவே முன்வந்து நன்கொடை வழங்குகிறார்கள். அப்படி வழங்கப்பட்ட சில குறிப்பிட்ட இடத்தில்தான் வானொலிப் பெட்டியை வைக்கலாம். அப்படிக் கட்டடம் இல்லாத நேரத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டில் சில பல இடங்களில் இருக்கலாம். பொது இடம் இருந்து தனிக் கட்டட வசதி இருந்து, அங்கு வானொலிப் பெட்டியை வைக்காமல் ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டில் வைத்திருந்தால் அப்பொழுது அதைத் தவறாகக் கொள்ளலாம்.

திரு எம். தேவராசன் : இத்தகைய வானொலிப் பெட்டிகளில் என்ன என்ன நிகழ்ச்சிகளை வைக்கலாம் என்ற வரையறை ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஒன்றும் வரையறை இல்லை.